# DEPOSITION OF WITNESS.
# (Chapter XXIII, Cr.P.C)
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, BODINAYAKANUR.

**CC.No.148/2023**

**Deposition of LW–1/PW–1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | லாவண்யா | **Age** | : | 43/2026 |
| **Husband Name** | : | கருப்பசாமி | **Religion** | : | இந்து |
| **Village** | : | மீனாட்சிபுரம் | **Calling** | : | கூலிவேலை |
| **Taluk** | : | உத்தமபாளையம் | **Caste** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **25/03/2026.**

1, 2 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1) நான் தேவாரத்தில் வசித்து வருகிறேன். 08/10/2022 ஆம் தேதி மதியம் சுமார் 03.00 மணிக்கு நானும், எனது மகன் பிரகாசும் எங்கள் வீட்டிற்கு பக்கத்தில் உள்ள மச்சக்காளை வீட்டின் முன்பாக சென்றபோது, அங்கிருந்த மச்சக்காளையும் பிரபாகரனும் என்னிடம் பிரச்சனை செய்தார்கள் அது குறித்து நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். (**புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது) .** போலீசார் என்னை விசாரித்தனர் . தற்சமயம் நான் எதிரிகளுடன் சமாதனம் ஆகி கொண்டேன். அதற்கான சமாதன மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். **(சமாதன மனு அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** எதிரிகள் மீது மேல் நடவடிக்கை எடுக்க தேவையில்லை.

**அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது .**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

2) கடந்த 08/10/2022–ம் தேதி மதியம் 1:30 மணிக்கு எனது மகன் பிரகாஷ் எங்களது உறவினர்களுடன் எங்கள் ஊர் அடிவாரத்தில் உள்ள பெருமாள் கோவில் திருவிழாவிற்கு சென்றிருந்தார் என்றும், அப்போது அங்கு இருந்த மச்சக்காளையும் பிரபாகரனும் எனது மகனிடம் அவர்களது செல்போனை கொடுத்து அங்கு செல்லும் பெண் பிள்ளை போட்டோ எடுத்து தருமாறு கேட்டார்கள் என்றும், அதற்கு எனது மகன் மறுக்கவே அங்கு இருந்த மச்சக்காளையும் பிரபாகரனும் எனது மகனை தகாத வார்த்தைகளால் பேசி கைகளால் அடித்தனர் என்றும், அதனால் எனது மகன் வீட்டிற்கு வந்து சம்பவம் பற்றி கூறினார் என்றும், அதன் பிறகு நான் எனது மகனை அழைத்துக் கொண்டு மச்சக்காளை வீட்டிற்கு சென்ற போது அங்கு இருந்த மச்சக்காளையும் பிரபாகரனும் என்னையும் எனது மகனையும் தகாத வார்த்தைகளால் பேசினார்கள் என்றும், மச்சக்காளை அங்கு கிடந்த அரிவாளை எடுத்து எனது மகனை வெட்ட வந்தார் என்றும், நான் தடுத்த போது எனது வலது உள்ளங்கையில் அரிவாளால் வெட்டி, காயம் ஏற்பட்டது என்றும், அதன் பிறகு எங்களது சத்தம் கேட்டு பக்கத்தில் இருந்தவர்கள் ஓடி வந்து எதிரிகள் இருவரையும் விலக்கி விட்டார்கள் என்றும், அதன் பின்பு எதிரிகள் மீது தேவாரம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்சமயம் எதிரிகளுடன் சமாதானமாகிக் கொண்டதால் உண்மையை மறைத்து பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி, குறுக்குவிசாரணை இல்லை எனத் தெரிவித்ததால் குறுக்குவிசாரணை இல்லை என முடிக்கப்பட்டது.

Taken down before me in Open Court, and read over to the witness and admitted by the deponent to be correct.

NALLA KANNAN M
Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.03.25 19:06:39 +0530

**Judicial Magistrate,**
**Bodinayakanur.**